DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 11 |
| Name | : | **அருள் ஜோதி** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1 மற்றும் 3 வது எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.09.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1.நான் தற்போது கல்லுவழியில் வசித்து வருகிறேன். சாட்சி சவரிமுத்து என்பவரை தெரியும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 26.01.2024 ம் தேதி அன்று காலை 06.30 மணியளவில் நான் எனது ஊரில் டீக்கடைக்கு செல்லும் போது சின்னப்பன் என்பவர் வீட்டு வாசலில் ஜோபின் என்ற பையன் நின்று கொண்டிருந்தான். நான் அந்த பையனிடம் என்னவென்று விசாரித்தபோது வீட்டில் உள்ளவர்களை அடித்துபோட்டுவிட்டதாக சொன்னான். அதன்பிறகு ஊரில் அபாயமணியடித்து ஊர்மக்கள் அனைவரும் வந்தார்கள்.

2.பின்பு காயம்பட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். 26.01.2024 அன்று குடியரசு தினம்என்பதால் எல்லோரையும் அனுப்பி விட்டு மாலை 5.30 மணியளவில் காளையார் கோவில் காவல்நிலைய போலிசார் சின்னப்பன் என்பவர் வீட்டிற்கு வந்து ரத்தகறை படித்த இடங்களை பார்த்தார்கள். பின்பு ரத்தக்கறை படிந்த தலையணை உறை, பெட்சிட் மற்றும் 5, 6 துண்டுகளையும் எடுத்து கைப்பற்றிவிட்டு பின்பு அந்த இடத்தை பார்வையிட்டு சாக்பீஸை வைத்து தரையில் அந்த இடத்தில் வரைந்தார்கள்.

3. அதன்பிறகு போலிசார் அங்கு இருந்த கிராமத்து ஊர்காரர்களிடம் இரண்டு நபர்கள் இடத்தை வந்து பார்த்தற்காக சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டார்கள். நானும் சபரிமுத்து என்பவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ- 7** ஆகும். போலிசார் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ- 8** ஆகும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** எத்தனை நபர்கள் தன்னை தாக்கியதாக ஜோபின் என்னிடம் சொன்னான் என்றால் எத்தனை நபர்கள் என்று சொல்லவில்லை. கோவில் மணி அடித்து ஊர் மக்கள் வந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் ஆமாம். பார்வைமகஜர் அ.த.சா.ஆ. 7 மற்றும் கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ- 8 ஆகியவற்றில் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் போலிசார் சின்னப்பன் வீட்டிற்கு வந்து பார்த்தற்காகவும், ரத்தக்கறை படிந்த தலையணை , போர்வை , துண்டு அனைத்தையும் கைப்பற்றியதற்காகவும் தரையில் படம் வரைந்தற்காகவும் மற்றும் பேப்பரில் படம் வரைந்ததற்காகவும் அந்த கையொப்பங்களை செய்தேன்.

2. சின்னப்பன் எனக்கு உறவினாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு எத்தனை போலிசார் வந்தார்கள் என்றால் SP உள்பட சுமார் 100 போலிசார் வந்தனர்.

படம் வரைந்தது யார் என்றால் காளையார்கோவில் காவல் ஆய்வாளார். நான் சொல்வது போன்று எந்த படமும் என்முன்னிலையில் வரையவில்லை என்றும் எந்த பொருட்களும் என்முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்றும் சின்னப்பன் எனக்கு வேண்டியநபர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கையொப்பத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**: இல்லை.

**மறுவிசாரணை**: இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.16 05:33:11 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**